03.07.2025

OS. No. 69/2021

**PW 1 – டேவிட் சகாய அந்தோணி ராஜ்**

**<u>2–ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

என் தகப்பனார் 1991–ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பிறகு எவ்வளவு தொகையை பென்சனாக பெற்றார் என்றால் ரூபாய் மூவாயிரம் பெற்றார். அவ்வாறு மூவாயிரம் ரூபாய் ஓய்வூதியம் பெற்றிருந்தால், அவர் பெயரிலேயே வங்கி கடன் பெற்றிருக்கலாமே ஏன் 2–ஆம் பிரதிவாதி பெயரில் வங்கி கடன் வாங்கினார்கள் என்றால், ஓய்வு பெற்றதால் கடன் பெற தகுதியில்லை என்று சொல்லிவிட்டார்கள். என் தகப்பனார் எவ்வளவு ஓய்வூதியம் பெற்றார் என்பதற்கும், பணிக்கொடை எவ்வளவு பெற்றார் என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களில் 2–ஆம் பிரதிவாதியின் பெயரில்தான் கணக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த 1992–ஆம் ஆண்டிற்கு பிறகு 2–ஆம் பிரதிவாதி வெளிநாட்டில் வேலை செய்தார் என்றால் சரிதான். அவ்வாறு வெளிநாட்டில் வேலை செய்து சம்பாதித்த பணத்தை என் தகப்பனாருக்கு 2–ஆம் பிரதிவாதி அனுப்பி அந்த பணத்தை தான் என் தகப்பனார் LIC Housing Finance–க்கு பணம் கட்டினார் என்றால் சரியல்ல. என் தந்தையாருடன் சேர்ந்து நானும் பணம் செலுத்தினேன் என்பதற்கு நானும் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–8 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணங்கள் நான் 2–ஆம் பிரதிவாதியின்கீழ் தாவா சொத்தில் வாடகைதாரராக குடியிருந்த காலத்தில் பெறப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களில் உள்ள முகவரியை என் பெற்றோர் அந்த காலகட்டத்தில் அங்கு வசித்ததால், அதையே நான் நீடித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையான ஆவணங்களை என் தகப்பனார் இறந்தபிறகு, யாருக்கும் தெரியாமல் அதை எடுத்து வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.11 வரையான ஆவணங்களை வழக்குரையுடன் தாக்கல் செய்யாமல், தற்போது தாக்கல் செய்ய காரணம் எதுவும் உண்டா என்றால், அந்த ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்பொழுது என்னிடம் இல்லை. 2–ஆம் பிரதிவாதி தாக்கல் செய்யும் ../

வழக்குரையை பொருத்து மேற்சொன்ன ஆவணங்களை தாக்கல் செய்துகொள்ளலாம் என்ற அடிப்படையில் என்னிடம் அந்த ஆவணங்கள் வழக்கு தாக்கல் செய்யும்பொழுதே இருந்தும், அவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பின்யோசனையுடன் வழக்கின் தன்மைக்கேற்ப இந்த ஆவணத்தை தற்போது தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன ஆவணங்கள் குறித்து நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd/- M. Christopher)
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.